# தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே

தெய்வீகப் பலியில்
உறவாடும் தெய்வமே ( 2 )
உன்னோடு பலியாக நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்;றிடுவாய் - 2

**1**
வானம் காணும் ஒளியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை - 2
மேகம் சிந்தும் துளியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை - இந்த
நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்

**2**
வேதம் சொன்ன வழியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை
பாதம் படைத்த கனியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை - இந்த
நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்